

# இடம் பொருள் கலைஞர்

106


**மகிழவன்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் கலைஞர் புகழ் பாடும் சென்னை மாநகரத்தின் பாலங்கள்!









# கலைஞர் புகழ்பாடும்
## சென்னை மாநகரத்தின் பாலங்கள்!

தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பில் பெரிதும் அக்கறை காட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தொழில்துறையிலும், மக்கள்தொகையிலும், பொருளாதாரத்திலும் வளர்ந்து வந்த சென்னையின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கில், சென்னையின் முதல் மேம்பாலத்தை 1973-ஆம் ஆண்டிலேயே கட்டி, அதற்கு **‘அண்ணா மேம்பாலம்’** என்று பெயர் சூட்டினார்.

அன்று தொடங்கிய மேம்பாலக் கட்டுமானங்கள் தமிழ்நாடெங்கும் கிளைகள் விரித்தன. அவற்றில் 90% மேம்பாலங்கள் கலைஞர் ஆட்சியில், கலைஞரின் முன்னெடுப்பில் அமைந்தவை. அதனால்தான், அவர் கட்டுமானங்களின் கதாநாயகராகத் திகழ்கிறார். அந்தச் சாதனைகளில் மிக முக்கியமான சாதனை, சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காண ஒரே சமயத்தில் கட்டப்பட்ட 10 மேம்பாலங்கள்.

### மாநகர மேயராகத் தளபதியார்!

1996-இல் சென்னை மாநகராட்சியைத் தி.மு.கழகம் கைப்பற்றும் வரை மேம்பாலங்கள், தரைப்பாலங்கள், சுரங்கப் பாதைகள் போன்றவற்றைக் கட்டமைக்கும் பணி ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்துத் துறை, தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப்பணித்துறை இவற்றின் வாயிலாகவே நிறைவேற்றப்பட்டு வந்தது. இந்த வரலாற்றை மாற்றி, முதன்முதலாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயராகப் பொறுப்பேற்ற, இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர், அன்றைய மேயர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை பெருநகரத்தின் வளர்ச்சிக்காகவும், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும், ஒரே நேரத்தில் 10 பாலங்களைக் கட்டுவதற்கு திட்டமிட்டார்.

### தொடங்கப்பட்ட பணிகள்


சென்னை மாநகரில் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த முக்கிய சாலைச் சந்திப்புகளில் மொத்தம் 115 கோடியே 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 10 மேம்பாலங்களைக் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டு, அப்பாலங்களைக் கட்ட முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31.01.1999 அன்று அடிக்கல் நாட்டினார்.

இந்த மேம்பாலங்களின் கட்டுமானப் பணிகள் 15.03.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டன. இந்த 10 மேம்பாலங்களில், ‘பீட்டர்ஸ் சாலை’- கான்ரான்ஸ்மித் சாலைச் சந்திப்பிலும், சர்தார் பட்டேல் சாலை- காந்தி மண்டபம் சாலைச் சந்திப்பிலும், கட்டப்பட்ட இரண்டு மேம்பாலங்கள் 5.02.2000 அன்று திறந்து வைக்கப்பட்டன.

பீட்டர்ஸ் சாலை, வெஸ்ட்காட் சாலைச் சந்திப்பில் கட்டப்பட்ட மேம்பாலமும்,டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை - இராயப்பேட்டை நெடுஞ்சாலைச் சந்திப்பில் கட்டப்பட்ட மேம்பாலமும், சர்தார் பட்டேல் சாலை - டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சாலைச் சந்திப்பில் கட்டப்பட்ட ஒரு மேம்பாலமும் என மூன்று பாலங்கள் 6.05.2000 அன்று திறந்து வைக்கப்பட்டன.

டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை - டி.டி.கே. சாலைச் சந்திப்பு, டி.டி.கே. சாலை-சர்.சி.வி.இராமசாமி சாலைச் சந்திப்பு ஆகிய இடங்களில் கட்டப்பட்ட இரு மேம்பாலங்களை 12-08-2000 அன்று திறந்துவைத்தார் கலைஞர்.

அப்போது அவர் ஆற்றிய உரையில், “சென்னை மாநகரத்துக்கு எழிலூட்டுவதற்காக மாத்திரமல்ல, வசதி செய்து தருவதற்காக இந்தப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 115 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில்



**இரயில்வே மேம்பாலமும், அந்தப் பூங்காவும் கலைஞர் அரசின் சாதனை மகுடத்தில் பதிக்கப்பட்ட மாணிக்க மணிகளாகப் புகழொளி வீசிக்கொண்டிருக்கின்றன.**

பத்து பாலங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு, இன்றுடன் 7 பாலங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. இந்த 7 பாலங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.77.50 கோடி. ஆனால், இதற்கான கட்டுமானச் செலவு ரூ.59.06 கோடி. எனவே, மிச்சப்படுத்தப்பட்ட தொகை ரூ.18.44 கோடி என்பதைக் கேட்க, நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மாநகராட்சி மன்றத்தையும் மேயரையும் அதிகாரிகளையும் மற்றும் இந்தக் கட்டுமானப் பணியை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தக்காரர்களையும் பெரிதும் பாராட்டி வாழ்த்துகிறேன்.” என்றார்.

அடுத்து, புரசைவாக்கம் டவுட்டன் பகுதியிலும், எழும்பூர்- பாந்தியன் சாலையிலும் கட்டப்பட்ட இரண்டு மேம்பாலங்கள் 02.12.2000 அன்று திறக்கப்பட்டன.

### அக்கறை காட்டாத அ.தி.மு.க. அரசு

பத்தாவது மேம்பாலமாக பெரம்பூர் ரயில் நிலையத்தின் அருகில் திருத்திய மதிப்பீட்டின்படி, 34.84 கோடி ரூபாய் செலவில், கட்டுவதற்குத் திட்டமிடப்பட்ட மேம்பாலத்தின் கட்டுமானப் பணிகள் 1996-2001 வரையிலான கழக ஆட்சியில் முடிவுறாமல் இருந்தன. 2001-இல் அமைந்த அ.தி.மு.க. ஆட்சி அந்தப் பாலத்தைத் தொடர்ந்து கட்டுவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல், பாலத்திற்காக எழுப்பப்பட்ட தூண்களையெல்லாம் 2001-2006 வரை ஆட்சியின் ஐந்து ஆண்டு காலத்தில் இரயிலிலும், சாலைகளிலும் செல்வோருக்குக் காட்சிப் பொருளாகவே வைத்திருந்தது. கிட்டத்தட்ட திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

### முரசொலி மாறன் பாலம்

தனது முந்தைய ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத்திட்டங்களை, அடுத்துவரும் ஆட்சியாளர்கள் கிடப்பில் போடுவதும், மீண்டும் ஆட்சிக்கு வரும்போது அவற்றையெல்லாம் தூசிதட்டி சீர்படுத்தி பயன்பாட்டுக்குக் கொண்டுவருவது, கலைஞருக்கும் புதிதல்ல. அந்த வகையில், 2006-இல் மீண்டும் கழக அரசு அமைந்தவுடன், பெரம்பூர் ரயில் நிலையம் அருகே அமைக்கத் திட்டமிடப்பட்ட பத்தாவது பாலத்திற்கான பணிகளை முடுக்கிவிட்டார், கலைஞர்.

முந்தைய ஆட்சியில் மாமன்றத் தலைவராக இருந்த இன்றைய கழகத் தலைவர் 2006-இல் உள்ளாட்சித் துறை அமைச்சர். அவர் எடுத்த பெருமுயற்சிகளின் காரணமாக, பெரம்பூர் இரயில்வே மேம்பாலத்தின் கட்டுமானப் பணிகள் 2008-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் மீண்டும் தொடங்கப்பட்டது. 51 கோடி ரூபாய் செலவில், 21 மாத காலத்தில் பாலம் கட்டிமுடிக்கப்பட்டு, ஒன்றிய அரசின் முன்னாள் அமைச்சர் ‘முரசொலி மாறன்’ அவர்களின் பெயர் சூட்டப்பட்டு, 28.03.2010 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

பெரம்பூர் இரயில்வே மேம்பாலத்தின் கீழே, ‘அழகிய பூங்கா’ அமைக்கப்பட்டு, அப்பகுதி மக்களின், குழந்தைகளின் இன்பகரமான மாலைவேளை பொழுது போக்கிற்கும் பயன்பட்டு வருவதுடன், இந்த இரயில்வே மேம்பாலமும், அந்தப் பூங்காவும் கலைஞர் அரசின் சாதனைமகுடத்தில் பதிக்கப்பட்ட மாணிக்க மணிகளாகப் புகழொளி வீசிக்கொண்டிருக்கின்றன. அப்பகுதி மக்கள் மட்டுமல்லாமல், பெரம்பூரைக் கடந்து செல்லும் இரயில் பயணிகளும் கலைஞரின் இந்தச் சாதனை மகுடத்தைக் காலத்துக்கும் கண்டு செல்வர்.

**...வலம் வருவோம்**

## வரும் முன் காக்கத் தவறும், பா.ஜ.க.!

உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்றுவரும், ‘கும்பமேளா கூத்துகள்’ நாளுக்கு நாள் கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கின்றன. கடந்த மாதம் 13-ஆம் தேதி தொடங்கிய கும்பமேளாவுக்கு, ‘உலகின் மிகப்பெரிய ஆன்மிகத் திருவிழா’ என கூட்டத்தைக் கூட்டினார்கள். ஆனால், அதற்குரிய ஏற்பாடுகள், வசதிகள் செய்யப்படவில்லை என்பதைச் செய்திகள் வெட்ட வெளிச்சமிட்டுள்ளன.

ஜனவரி மாத இறுதியில், கூட்டநெரிசலில் சிக்கி, 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்கள் குறித்த விவரங்களை, மாநில அரசு வெளியிட வேண்டும் என நாடாளுமன்றத்தில், அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் குரல் எழுப்பியும், இதுவரை செவிசாய்க்கவில்லை.


இப்படியான சூழ்நிலையில், கும்பமேளாவுக்குச் செல்லும் வாகனங்கள், பிரயாக்ராஜ் நகருக்குள் நுழைய முடியாமல் 300 கிலோ மீட்டர் தொலைவுக்கு வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. 48 மணி நேரமாக வாகனங்களிலேயே மக்கள் காத்திருப்பதுடன், உணவு, தண்ணீர், அவசரகால உதவிகள் எதுவும் இன்றி, மக்கள் அவதிப்படுவதாக கூறுகின்றனர். மக்கள்கூட்டம் காரணமாக ரயில்நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன், பிரயாக்ராஜ் நகருக்கான ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

ரயிலின் ஓட்டுநர் பகுதி மற்றும் முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளின் கண்ணாடிகளை உடைத்து ஏறிக் கொள்வது, எனப் பல வகைகளிலும் நெருக்கடிகள் தொடர்கின்றன.

ஒட்டுமொத்தமாக முன்னேற்பாடுகள் செய்யப்படாத நிகழ்வுபோல கும்பமேளா மாறியிருப்பதை, ஊடகங்கள் வெளிச்சமிட்ட பின்பும், ஒன்றியத்தையும், அம்மாநிலத்தையும் ஆளும் பா.ஜ.க. அரசுகள் விமர்சனங்களுக்குச் செவி சாய்க்கவில்லை.

‘வரும்முன் காக்க வேண்டும்’ என்பது, பா.ஜ.க. ஆட்சியாளர்களின் அகராதியிலேயே இல்லை என்பதை, கும்பமேளாவும் சான்றாக்கியுள்ளது.

## :ப்ளாஷ்பேக்



டாக்டர் ஆ.மாரிமுத்து



### கல்லூரிப் பேரவையில் கழக வெற்றி!

1980-இல் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில், நான், தி.மு.க. மாணவர் அணிச் செயலராக இருந்த போது, கல்லூரிப் பேரவைத் தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் அனைத்துப் பொறுப்புகளையும் தி.மு.க. மாணவர் அணி, கைப் பற்றியது. தேர்தல் வெற்றியைக் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் சமர்ப்பித்து பாராட்டைப் பெற்றோம். அப்போது, கோபாலபுரம் இல்லத்தில் தலைவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. தலைவருடன் புகைப்படம் எடுக்க, அவருக்குக் கீழே அமர கடும் போட்டி இருக்கும். ஏனென்றால், அவ்வாறு எடுத்தால்தான் படம் தெளிவாக இருக்கும். அன்றைக்கு, அந்த வாய்ப்பு எனக்கு கிடைத்து, மனதில் நீங்கா இடம் பிடித்த புகைப்படம் இது.

**- டாக்டர் ஆ.மாரிமுத்து,**
**மாவட்ட மருத்துவ அணித் தலைவர், தென்காசி தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞரைப் பாராட்டிய, ஜெகஜீவன்ராம்!

9.3.1969-இல் சென்னை, ராயபுரத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்புக்கான தொடக்க விழா நிகழ்ச்சி, அன்றைய முதலமைச்சர் கலைஞர் தலைமையில், ஒன்றிய அமைச்சர் ஜெகஜீவன்ராம் பங்கேற்புடன் நடைபெற்றது. அப்போது பேசிய ஜெகஜீவன்ராம், “வலிமையும் தகுதியும் உடைய ஒருவரின் கரங்களில், தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அண்ணாவின் நம்பிக்கைக்குரிய தோழர்களில் ஒருவராக விளங்கியவர் கலைஞர். அவரது தலைமையில், தமிழ்நாட்டு மக்கள் அமைதியான சுகவாழ்வைப் பெறுவார்கள்” என்று வெகுவாகப் பாராட்டினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

748

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131